869

உ

சந்தியா வந்தன ரகஸ்யம்

வேலூர்

சொ. சொக்கலிங்கம் பிள்ளை

அவர்களால் இயற்றப்பட்டு,

திருத்திப் பதிப்பித்தது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9-MAY 1927
MADRAS

...னி

...க்கூடத்தில்

...டதி.

224265

644
294 5

உ

திருச்சிற்றம்பலம்

சந்தியாவந்தன ரகசியம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 MAY 1927
MADRAS

திக்குநோக்கல்

சந்தியாவந்தனஞ் செய்யும்பொழுது உத்தரதிசையை நோக்கியிருத்தலினாலே முத்தியும், பூருவதிசையை நோக்கியிருத்தலினாலே புத்தியும் சித்திக்கும். புத்தி - போகம்.

உத்தரதிசையை நோக்கல் முத்தியை விரும்பும் சைவர்க்கும், பூருவதிசையை நோக்கல் புத்தியை விரும்பும் வைதிகர்க்கும் உரியதாம்.

கடவுள் முத்தியையருளும் ஞானசாரிய மூர்த்தியாயிருக்கும்போது தெற்கு நோக்கி யிருத்தலினாலும் ஐந்துபாசங்களையு மொழிக்கும். அகோரமுகம் தெற்கின்கண்ணதா யிருத்தலினாலும் முத்தி காமன். உத்தரதிசையை நோக்குதலும், அக்கடவுள் புத்தியையருளும் போக ரூபியாய் வீற்றிருக்கும் ஆதித்தமண்டலம், பூருவதிசையி விருத்தலினாலே புத்தி காமன், பூருவதிசையை நோக்குதலும் உரியதாயிற் றென வுணர்க. ஆதித்தன் மேற்றிசையை யடைந்தபோது வைதிகர் அத்திசையை நோக்கிச் சந்தியா வந்தனஞ் செய்தலும் அங்குள்ள மூர்த்தியை நோக்கியேயாம்.

பூமிசுத்தி

அஸ்திரமந்திர முச்சரித்துத் தானிருக்குந் தானத்தில் நீரைத் தெளித்தல் பூமிசுத்தியாம்.

அஸ்திரமந்திரம் சுத்தியைத் தரு மாற்றலுடையதாதலால் அதனை யுச்சரித்து நீரைத்தெளிக்கவே அத்தானம் சுத்தி யெய்து மென்றுணர்க.

கணபதி குருவந்தனம்

கணபதிமந்திர முச்சரித்துச் சிரசிலே மும்முறை குட்டிக் கணபதியை வழிபடுதல் சர்வவிக்கினங்களுஞ் சாந்தியாதற்பொருட்டும், குருமந்திரமுச்சரித்து நமஸ்காரமுத்திரையினலே குருவை வழிபடுதல் மலநீக்கமுஞ் சிவத்துவ விளக்கமு முண்டாதற் பொருட்டுமாம்.

குரு என்பது மலத்தை நீக்கிச் சிவத்தை யருள்பவரே எனப் பொருள்படும். கு-மலம். ரு-அதை நீக்குபவன்.

குருவினுடைய அருள் துணையாக முன்னின்றாலன்றி மலநீக்க முதலியன சித்தியா வாகலான், அவ்வருள் துணையாக நிற்குமாறு குருவணக்கஞ் செய்யப்படுமென்க.

சலசுத்தி

சலத்தில் நிரீக்ஷணம் புரோக்ஷணம் தாடனம் அப்பியுக்ஷணம் தாளத்திரயம் திக்குப்பந்தனம் அவகுண்டனம் தேனு முத்திரை என்னும் எட்டுச் சுத்திகளுஞ் செய்தல் சலசுத்தியாம்.

இச்சுத்தியினலே ஜலம் சிவசத்தி வடிவினதாகி மேற்செய்யுங் கிரியைகளுக்கு இன்றியமையாச் சாதனமாயிருக்குமென் றுணர்க.

2:47 N27

நிரீக்ஷனம்

சிவமூல மந்திர முச்சரித்துத் திவ்விய முத்திரை தாங்கி வலக்கண் நெற்றிக்கண் இடக்கண் என்னும் மூன்றினாலும் அந்த நீரைப் பார்த்தல் நிரீக்ஷணமாம். நிரீக்ஷணம் - பார்த்தல்.

வலக்கண்ணானது ஆதித்தமண்டல வடிவாயும் இச்சாசத்தி சொரூபமாயும் விளங்கும். நெற்றிக் கண்ணானது அக்கினிமண்டல வடிவாயும் ஞானசத்தி சொரூபமாயும் விளங்கும். இடக்கண்ணானது சந்திரமண்டல வடிவாயும கிரியாசத்தி சொரூபமாயும் விளங்கும்.

வலக்கண்ணாற் பார்க்கும்பொழுது அந்நீரிலுள்ள குற்றமனைத்தும் அதனால் அகன்றதாகவும், நெற்றிக்கண்ணாற் பார்க்கும்பொழுது அங்குள்ள அக்கினியினால் அது எரிக்கப்பட்டதாகவும், இடக்கண்ணாற் பார்க்கும் பொழுது அங்குள்ள அமிர்தத்தினால் அவ் வக்கினி தணியும்படி அதை நனைத்ததாகவும் பாவித்தல் வேண்டும்.

ஒரு கன்மஞ் செய்யுமிடத்து மந்திரம் கிரியை பாவனை என்னும் மூன்றானுஞ் செய்யப்படும்.

மந்திரம் அதிதேவதையை யுடையது. கிரியை முத்திரையாற் செய்யப்படுவது. பாவனை மனத்தால் நினைக்கப்படுவது.

முத்திரா என்னும் வடசொல் தேவரை மகிழ்வித்து அசுரரைத் துரத்துதல் எனப் பொருள்படும். முத் - மகிழ்ச்சி, திரா - வேகமாய்ச் செல்லல்.

மந்திர முச்சரித்து முத்திரை காட்டவே அதற்குரிய அதிதேவதை பிரசன்னமாகி மகிழ்வுற்று இவன் அக்கிரியையிற் கொண்ட பாவனையை முற்றச்செய்யும். அசுரர்கள் அதற்குக் கேடு செய்யாது அகலுவர்.

மந்திரமும் முத்திரையும் இவன் அக்கிரியையிற் கொண்ட கருத்திது வென்பதை யுணர்த்தும். பாவனை யாவது இக் கிரியையால் இது இவ்வா ருயிற்றென மதித்தல்.

சூரியன் அக்கினி சந்திரன் என்னும் மூன்றும் சிவனுக்கு மூன்று சத்திகள் வடிவான மூன்று நேத்திரங்களாயிருக்கும். இவன் சிவ தீக்ஷா சம்ஸ்காரத்தினுலே சிவரூபம் பெற்று விளங்கலால் இவனுக்கும் அவையே நேத்திரங்களாய் விளங்குமென் றுணர்க.

புரோக்ஷணம்

அஸ்திர மந்திர முச்சரித்து நிமிர்த்திய பதாகை முத்திரையையுடைய கைத்தலத்தினுல் விந்துத்தானத் துள்ள அமிர்தத்தை அந்நீரிற் றெளித்தல் புரோக்ஷணமாம். இது நிரீக்ஷணஞ் செய்யப்பட்டது. சுத்தியாதற் பொருட்டுச் செய்வது.

விந்துத்தானம் புருவநடு. அங்கே வெண்மையான விந்துமண்டலம் விளங்கும். அதில் அமிர்தமிருக்கும்.

தாடனம்

அஸ்திரமந்திர முச்சரித்துச் சுட்டுவிரல் நீட்டிய கையினுல் நீரிலே தட்டி, அதிற் சிவசத்தியைப் பிரகாசிக்கச் செய்தல் தாடனமாம். தாடனம்-தட்டுதல்.

ஒருவன் கல்லை யடிக்கும்போது அதனிடத்து வியாபகமாயிருக்கும் அக்கினி பொறிவடிவாய் வெளிப்படுதல் போலச், சடமாகிய இந்தப்பதார்த்தத்தினிடத்து வியாபகமாயிருக்குஞ் சிவசத்தி இத்தாடனத்தினுற் பிர ... மென்க.

அப்பியுக்ஷணம்

கவசமந்திரமுச்சரித்துச் சுட்டுவிரல் நீட்டிய கையினல் அதை மூடுதல் அப்பியுக்ஷணமாம். அப்பியுக்ஷணம்-மூடுதல். இது அங்கீரிற்றேன்றிய சிவசத்தியின் பிரகாசமானது அந்தத்தானத்தை விட்டு நீங்காமல் இருக்கும் பொருட்டுச் செய்யப்படுவது.

தாளத்திரயம்

அஸ்திரமந்திர முச்சரித்து வலக்கை நடுவிரல் மூன்றினலும் இடவுள்ளங்கையிலே மும்முறை தட்டுதல் தாளத்திரயமாம்.

இது அச்சத்தியினது பிரகாசத்துக்குக்கேடு செய்யவரும் அசுரர் முதலாயினேரைத் துரத்து நிமித்தஞ் செய்வது.

திக்குப்பந்தனம்

அஸ்திரமந்திர முச்சரித்துச் சோடிகைமுத்திகையினலே நான்மருங்கிலும் அக்கினிப்பிரகாசமுண்டாக்கி. அசுரர் முதலாயினேர் அவ்விடத்து வராதொழியும்படி அதற்குக் காவல்செய்தல் திக்குப்பந்தனமாம்.

அவகுண்டனம்

கவசமந்திர முச்சரித்துச் சுட்டுவிரல் நீட்டிய கையினல் நீரில் வளைத்து அச்சிவசத்தி பிரகாசித்திருக்குந் தானத்தைச் சூழ மதிலுண்டாக்குதல் அவகுண்டனமாம். அவகுண்டனம்-சுற்றுதல், வளைத்தல்.

இதனல் மூன்று மதிலும் மூன்று அகழிய[...] டானதாகப் பாவித்தல் வேண்டும்.

தேனுமுத்திரை

சிவமூல மந்திர முச்சரித்துக் காமதேனுவின் நான் குமுலைபோலாக்கிய முத்திரையை நீரிற்காட்டி அதிலே காமதேனுவின் பாலைப்பொழிந்ததாகப் பாவித்தல்தேனு முத்திரை கொடுத்தலாம்,

அஸ்திரசந்தியோபாசனம்

அஸ்திரமந்திர முச்சரித்துச் சூரியமண்டல மத்தியில் எழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானுக்கு அந்நீரினால் மும்முறை தருப்பணஞ் செய்து, பத்துருச் செபித்து, மீட்டும் ஒருமுறை தருப்பணஞ் செய்து, அவரை உவப்பித்து வழிபடுதல் அஸ்திரசந்தியோ பாசனமாம்.

அஸ்திரமந்திரம் பாவங்களை அழிக்கும் ஆயுதமாதலால் இது பாவங்களை யழித்தல் காரணமாகச் செய்வது.

கடவுள் அங்கிங்கெனுதபடி எங்கும் வியாபகராய் நிஷ்களராயிருப்பினும் ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு உய்யும் பொருட்டுச் சூரியமண்டல முதலிய விடங்களிலே திருவுருக்கொண் டெழுந்தருளியிருந்து அவர்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுதலும் அவரது பெருங் கருணைக் குணமாம்.

தருப்பணஞ் செய்தலாவது மந்திர சகிதமான நீரை அவருக்களித்து உவப்பித்தல். தருப்பணம்-உவப்பித்தல்.

தருப்பணஞ் செய்யவே அவர் மகிழ்வெய்தி அநுக்கிரகஞ் செய்வர். அதனுல் இவன் செய்த பாவங்களனைத்தும் அழிந்தொழியும். ஒழியவே இவனைப் பந்தித்த கன்ம பலமானது நீக்கமுறும்.

எனவே இது கன்மமல நீக்கத்தின் பொருட்டு ...ட்ட ஒரு கிரியையாத லுணர்க.

ஆசமனம்

ஆன்மதத்துவ, வித்தியாதத்துவ, சிவதத்துவ, மந்திரங்களை யுச்சரித்துக் கோகன்ன முத்திரையை யுடைய வலக்கையிற் பெருவிரலடியிற் சார்ந்த உழுந்தமிழ்ந்த சலத்தை மும்முறை உட்கொள்ளுதல் ஆசனமாம். கோகன்னமுத்திரை-பசுவின் காதுபோன்ற முத்திரை.

இவ்வாசமனத்தினல் இருக்கு யசுர் சாமம் என்னும் மூன்று வேதங்களும் பிரீதியெய்தும். ஆசமனத்தின் பின்பு உதடுக ளிரண்டையுந் துடைத்தலினல் அதர்வண வேதமும் இதிகாசமும் பிரீதி யெய்தும். அவற்றை அதோமுகமாகத் துடைத்தலினல் விநாயகர் பிரீதியெய்துவர்.

இனி இது ஆன்மதத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவம் என்னும் மூவகைத் தத்துவங்களையுஞ் சுத்தி செய்தலாம். இத்தத்துவ மூன்றுக்குஞ் சுத்தியதிதேவதையாவார் முறையே பிரமாவும் விஷ்ணுவும் உருத்திரனுமாம்.

ஆன்மதத்துவமானது பிரிதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்னும் பூதமைந்தும், கந்தம் இரதம் உருவம் பரிசம் சத்தம் என்னுந் தன்மாத்திரை யைந்தும், வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் என்னுங் கன்மேந்திரிய மைந்தும், மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஞானேந்திரிய மைந்தும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணம் நான்கும் ஆகிய இருபத்து நான்குமாம். வித்தியாதத்துவமாவது கலை காலம் நியதி வித்தை அராகம் புருடன் மாயை என்னும் எழுமாம். சிவதத்துவமாவது சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் சத்தி சிவம் என்னும் ஐந்துமாம். இவற்றுள் சத்தி தத்துவம் மந்திரங்களி னிருப்பிடமாதலாலும் சிவதத்துவம் லயத்தான மாதலாலும் இவை சுத்தி செய்யப்படா. ஏனை முப்பத்து நான்கு தத்துவங்களுமே சுத்தியாவனவாம்.

மந்திரத்தின் ஸ்வதா வென்னு மந்தரமானது அதி தேவதையைப் பிரசன்னமாக்கும். அத்தேவதை தனக்குரிய தத்துவங்களைச் சுத்தி செய்தருளும். அதாவது பிரமா தனக்குரிய ஆன்மதத்துவ மிருபத்து நான்கை யுஞ் சுத்தி செய்வர். விஷ்ணு தனக்குரிய வித்தியாதத் துவ மேழையுஞ் சுத்தி செய்வர். உருத்திரன் தனக் குரிய சிவதத்துவ மைந்தனுள் சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் என்னும் மூன்றையுஞ் சுத்தி செய்வர்.

தத்துவங்கள் சுத்தியுறுதலாவது ஆண்மாவினாலே சனனங்கள் தோறுஞ் செய்யப்பட்டு அத்தத்துவங்களி லே கட்டுண்டு கிடக்கும் சஞ்சிதவினைகள் சிவசத்தியி னாலே யழிக்கப்பட்டொழிதலால், ஆன்மாவுக்கும் அத் தத்துவங்களுக்கும் அவ்வினை காரணமாக உளதாயிருந்த தொடர்பு இன்றி யொழிதலாம்.

அஃதொழியவே ஆன்மா அத்தத்துவங்களிலுள்ள தநுகரண புவன போகங்களை அதன்மேற் சென்றடைய மாட்டாதென வுணர்க.

எனவே இது மாயாமல நீக்கத்தின் பொருட்டு வைக்கப்பட்ட கிரியையாதல் கண்டுகொள்க.

சல சுத்திவாயிலாகச் சலத்திலே வெளிப்பட்டு நின் ற சிவசத்தி அஸ்திரசந்தியோபாசனம் ஆசனமாகிய இவ் விருகிரியைகளிலும் துணைக்காரணமாய் நின்று தனது வியாபகத்துளடங்கிய கன்மமலம் மாயாமலம் என்னும் இருமலங்களையும் ஒழித்தவாறும் உணர்ந்து கொள்க.

தொடுமிடம்

இருதயமந்திர முச்சரித்துப் பெருவிரலோடுகூடிய அணிவிரலினாலே முகம் மூக்கு வலக்கண் இடக்கண் வலக்காது இடக்காது உந்தி மார்பு வலப்புயம் இடப் [illegible] சிரசு என்னும் இப்பன்னிரண்டு தானங்களையுந் [illegible] தொடுமிடமாம்.

இது அத்தானங்களைச் சுத்தி செய்தலும், அத்தானங்களின் அதிதேவதைகளை அதிஷ்டித்தலும், அவர்களைப் பிரீதிப்படுத்தலுமாம்.

முத்திரைக் குரிய பெருவிரல் அணிவிரல்களினதிதேவதை அமிர்த கலையும் ஈசுரனுமாம். தொடுமிடங்களில்' முகத்துக்குக் கங்கையும், மூக்குக்குப் பிராணனும், விழிகட்குச் சூரிய சந்திரர்களும், செவிகட்கு லோகபாலகரும், உந்திக்குப் பிரமனும், மார்புக்கு உருத்திரனும், புயங்கட்கு அசுவினிதேவரும், சிரசுக்கு விஷ்ணுவும் அதிதேவதைகளாம்.

விபூதிசுத்தி

விபூதியானது பராசத்தி வடிவமாயுள்ளது. அதற்கு அதிதேவதை அக்கினி ருத்திரனும். விபூதிக்கு முதலில் நிரீக்ஷணம் புரோக்ஷணம் தாடனம் அப்பியுக்ஷணம் என்னும் நான்கு சுத்திகள் செய்யப்படும். இவை செய்தற் கருத்தைச் சலசுத்தியிலுரைத்தவாறு கொள்க.

கற்பமுறையில் ஆக்கப்படாத விபூதியைப் பஞ்ச கலாமந்திரங்களினல் அபிமந்திரித்தல் வேண்டும். அது நிவர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் பஞ்சகலைகளையுஞ் சுத்திசெய்தலாம்.

இக் கலாசுத்தியினல் தத்துவம் புவனம் வன்னம் பதம் மந்திரம் என்னும் ஏனையத்துவாக்களுஞ் சுத்தியுறும். அதாவது மந்திரம் பதத்திஞலும் பதம் வன்னத்திஞலும் வன்னம் புவனத்திஞலும் புவனம் தத்துவத்திஞலும் தத்துவம் கலையிஞலும் வியாபிக்கப்பட்டிருக்கும். அதனல் கலையைச் சுத்திசெய்யவே அதனுள் வியாப்பியமாயிருக்கும் தத்துவமுதலிய ஏனையத்துவாக்களும் தாமே சுத்தியுறுமென்றுணர்க.

கலாசுத்தி செய்த பின்பு ஈசான முதலி
தாமந்திரம் பதினென்றிஞலும் அபிமந்திரி

அது அக்கலைகளை வியாபித்திருக்கும் சிவசத்தியை அதிற் பிரகாசிக்கச் செய்தலாம். அதாவது தத்துவ முதலிய ஐந்து அத்துவாக்களையும் வியாபித்திருக்கின்ற கலாத்துவாவை விந்துவானது வியாபித்திருக்கும். அவ்விந்துவைச் சிவசத்தி வியாயித்திருக்கும். அச்சத்தி சிவனோடு அக்கினியிற் சூடுபோல அபின்னமாய் அவருடைய குணமாய் விளங்கும்.

இன்னும் அச்சத்தியானது பஞ்சகலைகளைப் பொருந்தி நிற்கும்போது ஈசானி முதலிய ஐந்து நாமங்களையுடையதாயும், இருதயமுதலிய வேறு ஆறுநாமங்களையுடையதாயும் விளங்கும். இச்சத்திபேத நாமங்களே ஈசானுதி பதினொருமந்திரங்களாம். இச்சத்தி பேதங்கள் அக்கினியிலுள்ள சூடு ஒளி முதலிய குணங்கள்போல எவற்றினும் மேம்பட்ட எல்லையையுடைமை சர்வசகத்தையும் பூரிக்கு மியல்புடைமை முதலிய அவருடைய குணங்களாய் விளங்கும். அக்குணங்களை யுடைமையால் அவர் சர்வசேதனுசேதனப் பிரபஞ்சங்கட்கும் நாயகராய் விளங்குவர். அந்த நாயகத்துமே அவருடைய ஐசுவரியமாம். அது வசித்துவ முதலிய எல்லா ஐசுவரியங்களினும் மேம்பட்டு மகத்தாய் விளங்கலால் மகதைசுவரியம் எனப்படும். அந்த மகதைசுவரியம் பொருந்துமாறே ஈசானுதி மந்திரங்களால் விபூதியை அபிமந்திரிக்கப்படுகின்றது. அந்த மகதைசுவரியம் பொருந்தியதனுற்றான் அது விபூதியெனப் படுகின்றது. விபூதி - மகதைசுவரியம்.

இதனுல் விபூதியில் அத்துவசுத்திசெய்து சிவனுடைய ஐசுவரிய சத்திகளை அதிற் பிரகாசிக்கச் செய்தல் விபூதிசுத்தி யென்றவாருயிற்று.

பின்பு அதற்குத் திக்குப்பந்தனமும் அவகுண்டனமும் செய்யப்படும். இவற்றின் பொருளையுஞ் சலசுத்தி யுரைத்தவாறு கொள்க.

விபூதிஸ்நானம்

மலஸ்நானம்

அஸ்திரமந்திரமுச்சரித்து விபூதித் தூளியைவலது கைப் பெருவிரல் அணிவிரல்களால் எடுத்துச் சிரசுமு தற்பாத மீறாகப் பூசி மலஸ்நானஞ் செய்தலினுல் ஆன் மாவைப் பந்தித்த மூலமலமாகிய ஆணவமானது தனது சத்திகெட்டொழியும்.

விதிஸ்நானம்

விபூதியை முக்குறித் தொகுதியாகத் தரித்தல் ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் அதனுல் அழித்தொழிக்குங் கருத்தினுலாம்.

அப்படித் தரிக்குமிடத்து முப்பத்திரண்டு, பதி னறு, பன்னிரண்டு, எட்டு, ஐந்து என்னுங் கணக் குடைய தானங்களில் அவ்வவர்கொள்ளும் குருபாரம் பரையின் சம்பிரதாயப்படி தரிக்கப்படும்.

இவற்றுள் சிரசு நெற்றி செவிகள் விழிகள் நாசி முகம் கழுத்து தோள்கள் கைகள் முழங்கைகள் மணிக் கட்டுகள் இருதயம் நாபி குறி குதம் தொடைகள் முழந் தாள்கள் கணைக்கால்கள் விலாப்புறங்கள் முதுகு பாதங் கள் என்னும் முப்பத்திரண்டங்கங்களிலே தரிப்பதனுல் அட்டமூர்த்திகளெண்மரும், வித்தியேசுரரெண்மரும், லோகபாலகரெண்மரும், அஷ்டவசுக்களெண்மரும் பிரீ தியடைவார்கள்.

நெற்றி காதுகள் தோள்கள் கைகள் முழங்கைகள் மணிக்கட்டுகள் இருதயம் நாபி விலாப்புறங்கள் முதுகு என்னும் பதினறங்கங்களிலே தரிப்பதனுல் சிவனும் ... கினியும், வாமை முதலிய நவசதிகளும், ... தேவர்களும் பிரீதியடைவார்கள்.

சிரசு நெற்றி இருதயம் நாபி முழந்தாள்கள் தோள்கள் கைகள் முதுகு கடிப்புறமென்னும் பன்னிரண்டங்கங்களிலே தரிப்பதனல் சிவனும், சத்தியும், சதாசிவனும், வாமை முதலிய நவசத்திகளும் பிரீதியடைவார்கள்.

சிரசு நெற்றி காதுகள் கைகள் இருதயம் கடிப்புறம் என்னும் எட்டங்கங்களிலே தரிப்பதனல் பிரம்மாவும் சப்தரிஷிகளும் பிரீதியடைவார்கள்.

நெற்றி கைகள் இருதயம் நாபி என்னும் ஐந்தங்கங்களிலே தரிப்பதனல் சதாசிவன், மகேசுரன், உருத்திரன், விண்டு, பிரமா என்னும் ஐவரும் பிரீதியடைவார்கள்.

இவர்கள் இத்தானங்களுக்கு அதிதேவதைகளாம். விபூதிதாரணத்தினல் இத்தானங்கள் சுத்தியெய்தும். உடனே அதிதேவதைகள் பிரசன்னமாகி மகிழ்வுற்று இவனது மலபந்தத்தை நீக்கியருளுவர்.

விபூதிதரிக்குமிடத்துச் சிரசில் ஈசானமந்திரத்தினுலும் நெற்றியில் தற்புருடமந்திரத்தினுலும் மார்பில் அகோரமந்திரத்தினுலும் குய்யத்தில் வாமதேவ மந்திரத்தினுலும் முழந்தாள்களிலும் ஏனையங்கங்களிலும் சத்தியோசாத மந்திரத்தினுலும் தரிக்கத்தக்கது. இவ்வாறு தரித்தல் விதிஸ்நானமெனப்படும்.

இனி நெற்றி இருதயம் புயங்கள் தோள்கள் என்னுந் தானங்களில் எல்லாவருணத்தாரும் அவ்வாறங்குலவளவினதாகவும், ஏனையங்கங்களிலே பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்னும் நால்வரும் முறையே ஆறு நான்கு இரண்டு ஒன்று என்னும் அங்குல அளவினதாகவும் தரித்தல்வேண்டும். நான்கு வருணத்து பெண்களும் சூத்திரர்க்கு விதித்தவாறே தரித்தல் வேண்டும்.

மந்திரஸ்நானம்

எஞ்சிய விபூதியோடு சலம் விட்டுக் கும்பமுத்திரையாகப் பிடித்து ஈசான முதலிய பஞ்சப்பிரம மந்திரங்களை உச்சரித்து மூலமந்திரத்திலே [illegible] சிரசில் அபிஷேகஞ் செய்துகொள்ளல்வேண்டும். இது [illegible] புறம் றற அகலும்படி செய்யும் மந்திரஸ்நானமாம்.

ஆகவே சிவசத்தி வடிவினதாய் விளங்கும் விபூதியால் ஸ்நானஞ் செய்துகொள்ளுதலாகிய இது ஆணவமலநீக்கத்தின் பொருட்டு வைக்கப்பட்ட கிரியையாதல் கண்டுகொள்க.

இதுகாறுங்கூறிப்போந்த அஸ்திரசந்தியோபாசனம் ஆசமனம் விபூதி ஸ்நானம் ஆகிய மூன்றும் முறையே கன்மமலநீக்கத்துக்கும் மாயாமலநீக்கத்துக்கும் ஆணவமலநீக்கத்துக்கும் ஏதுவாவனவாய் ஒன்றற்கொன்று தொடர்புடையனவாய் அமைந்திருத்தல் காண்க.

அதிதேவதைகளுள் அட்டமூர்த்திகளாவார் சர்வர், பசுபதி, உக்கிரர், உருத்திரர், பவர், ஈசானர், மகாதேவர், பீமர் எனவிவர்.

வித்தியேசுரரெண்மராவார் அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி எனவிவர்.

லோகபாலகரெண்மராவார் இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என விவர்.

நவசத்திகளாவார் வாமை, ஜேஷ்டை, ரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சர்வபூததமனி எனவிவர்.

ஆசமனம்

அதன்பின்பு முன்போல ஆசமனஞ் [illegible] வேண்டும்.

இது ஆணவமலம் ஒழிந்த பின்னர் முன்செய்த தத்துவசுத்தி நன்குநிலை பெறும்படி மீண்டும் அத்தத்துவங்களைச் சுத்திசெய்தலாம்.

மானதஸ்நானம்

மூலமந்திரத்தை நாதாந்தமாக உச்சரித்து விந்துதானத்திலிருந்து பெருகுகிற அமிர்தப் பிரவாகத்தினாலே தேகத்தின் உள்ளும் புறமும் அபிஷேகஞ் செய்யப்பட்டதாகப் பாவித்தல் மானதஸ்நானமாம். மனத்தார் செய்யும் ஸ்நானம்—மானஸ்நானம்.

இது மும்மல சம்பந்தத்தினின்று நீங்கிய ஆன்மாவும் தேகமும் பரிசுத்த மெய்தும்படி செய்யப்படுவது.

இதில் அமிர்தம் பிரவாகிக்கும் வகையாவது பிராணாயாமத்தினாலே பிராணாதி வாயுக்களை யடக்கி யிருந்து கொண்டு மூலாதாரமுதல் துவாதசாந்த பரியந்தம் மூலமந்திரத்தை யுச்சரித்துச் சிவனோடு ஒருமையைப் பாவிக்குமிடத்து விந்துவானது க்ஷோபிக்கப்பட்டு அதிலிருந்து அமிர்தமானது பிரவாகிக்கும். அந்த அமிர்தத்தினால் உள்ளேயும் புறத்தையும் நனைத்தல் பரிசுத்தகரமாம்.

சகளீகரணம்

சகளீகரணமாவது சிவசொரூப முண்டாக்குதல் அதாவது முன்செய்த கிரியைகளினாலே தனக்குள்ள மாயாசம்பந்த வடிவம் ஒழிந்துவிட்டமையால், அதன் மேல் வேண்டப்படுவதாகிய சிவசம்பந்த சொரூபத்தை உண்டாக்கிக் கொள்ளுதலாம். சகள × கரணம், சகளீ[illegible]ம். சகளம் - உருவம். கரணம் - செய்தல்.

கரசுத்தி

அஸ்திர மந்திர முச்சரித்து வலக்கையினுலே இடக்கையையும் இடக்கையினுலே வலக்கையையும் உள்ளும் புறமுந் துடைத்து அக்கைகளிலுள்ள அசுசிகளை அக்கினியினுற் றகித்ததாகப் பாவித்தல் கரசுத்தியாம். அதன் பின்பு சத்தி மந்திர முச்சரித்து இருகைகளையுங் குவித்தல் சத்தியமிர்தத்தினுல் அவ்வக்கினியின் உஷ்ணம் தணியும்படி நினைத்தலாம்.

இது கர நியாசஞ் செய்யும்பொருட்டு முன்னர்க் கைகளைச் சுத்திசெய்து கொள்ளுதலாம்.

கர நியாசம்

இருகைகளையும் சிவனுக்குரிய கமலாசனமாகப் பாவித்து அதிலே சிவனை அருச்சித்து அக்கைகளை சிவ வடிவினவாக்கல் கரநியாசமாம்.

அஃதாவது: இருகரங்களுஞ் சத்திசிவ வடிவினவாய் விளங்கும். அவ்விருகரங்களையுங் குவித்தவிடத்து அங்குட்டங்களொழிந்த மற்றை யெட்டுவிரல்களும் இருதய கமலத்தின் எட்டிதழ்வடிவினவாயும், மத்தியில் வைத்த அங்குட்டவிரல் அக்கமலத்தின் கர்ணிகைவடிவினதாயும் பாவிக்கப்படும்.

குவித்த இருகைகளின் நடுவில் அங்குட்டவிரல்களினுலே சிவாசனமந்திர முச்சரித்து நியசித்தல் அதிலே சிவனுக்குரிய மந்திரசிம்மாசன மமைத்துப் பூசித்தலும், அதில் சிவமூர்த்தி மந்திரத்தினுல் நியசித்தல் சிவனுக்குரிய சரீரமாகிய மூர்த்தியை அவ்வாசனத்தின்மீது எழுந்தருளச்செய்து பூசித்தலும், சிருட்டி திதி சங்காரம் என்னும் கிரமங்களில் அவரவர் அதிகாரத்துக்கியை[illegible] வொன்றுபற்றி ஐந்துவிரல்களிலும் ஈசான முதலி[illegible] சப்பிரமந்திரங்களால் நியாசஞ்செய்தல் [illegible]

ளினலமைந்த சிவனுடைய சிரசுமுதலிய அவயவங்களை அவற்றி அமைத்துப் பூசித்தலும், கைகளின் நடுவில் அங்குட்டவிரல்களினலே வித்தியாதேக மந்திரமுச்சரித்து நியசித்தல் சிவலிங்க மூர்த்தியிலே சிவனுக்குரிய வித்தியாதேகத்தை யமைத்துப்பூசித்தலும், இருகைகளின் நடுவிரல் மூன்றினலும் நேத்திரமந்திரமுச்சரித்து நியசித்தல் அச்சிவனுக்கு நேத்திரமமைத்துப் பூசித்தலும், அங்குட்ட விரலினலே சிவமூலமந்திர முச்சரித்து நியசித்தல் அச்சிவலிங்கமூர்த்தியிற் நிஷ்களமாகிய சிவனை ஆவாகித்துப் பூசித்தலும், விரல்களில் அங்கமந்திரங்களினலே நியாசஞ்செய்தல் அச்சிவனுக்குரிய இருதய முதலிய அங்கங்களை அமைத்துப் பூசித்தலுமாகிய பாவனைகளை யுடையனவாம். அதன்பின்பு கவசமந்திரத்தினலே அவகுண்டனஞ்செய்தல் அதைச்சூழ மதில் உண்டாக்கலாம். இருகைகளையுங் கூட்டிக் குவித்துச் சிவமூல மந்திரத்தினலே பரமீகரணஞ்செய்தல் முன்வைத்த மந்திரமனைத்தையும் ஏகீபாவஞ் செய்தலாம்.

இதுமேலே அங்கத்தைச் சிவசொரூப மாக்குநிமித்தம் அதற்குத் துணையாய் வேண்டப்படுவதாகிய கையை முன்னர்ச் சிவவடிவினதாக்கிக் கொள்ளுதலாம். சிவனது வியாபகத்தைப் பாவித்துப் பூசிக்கவே அது சிவவடிவினதாமென்றுணர்க.

சமயதீக்ஷிதர் பஞ்சப்பிரமவடிவிற்கு அதிகாரமில்லாதவரா தலினலே சிவாசன மூர்த்தி பஞ்சப்பிரம வித்தியாதேக மூலமந்திர நியாசங்களின்றி அங்கமந்திரங்களான்மாத்திரம் அங்கநியாச கரநியாசங்கள் செய்தற்குரியராவர்.

இக்கரநியாசமானது சிருட்டிக்கிரமம், திதிக்கிரமம், சங்காரக்கிரமம் என முத்திறப்படும். சிருட்டிக்கிரமமாவது வலக்கைப்பெருவிரலாதியாகத் தொடங்கி ...கைப் பெருவிரலீருக நியசிப்பது. திதிக்கிரம ...ருவிரல்முதற் சிறுவிலீருக நியசிப்பது. சங்

காரக்கிரமமாவது சிறுவிரல்முதற் பெருவிரலீறாக நிய சிப்பது.

பிரமசாரியும் மணம்புரியாத கன்னிகையும் சிருட் டிக்கிரமங் கொள்ளற்குரியர். கிரகத்தனும் அவன்மனை வியாகிய சுமங்கிலியும் திதிக்கிரமங் கொள்ளற்குரியர். வானப்பிரஸ்தனும் சந்நியாசியும் விதவையும் சங்காரக் கிரமங் கொள்ளற்குரியர். இம்முறையானன்றி மாறு படச்செய்யின் அதனுல் தீமையே விளையுமென்றுணர்க.

அங்கநியாசம்

அங்கத்திற்சிவவடிவை வைத்துப் பூசித்து அதைச் சிவ சொரூபமாகப் பாவித்தல் அங்க நியாசமாம். அது வருமாறு :

பெருவிரல் அணிவிர லிரண்டையுஞ் சேர்த்துச் சிவாசன மந்திரத்தினுல் இருதயத்தில் நியாசஞ் செய் தல் இருதய கமலவடிவாய் விளங்குஞ் சிவாசனத்தை அதில் அமைத்துப் பூசித்தலும், சிவமூர்த்தி மந்திரத்தி னுல் அதில் நியாசஞ் செய்தல் சிவமூர்த்தியை அவ்வாச னத்தின்மேல் எழுந்தருளச்செய்து பூசித்தலும், கையை முஷ்டியாகப் பிடித்துப் பெருவிரலால் ஈசான மந்திர முச்சரித்துச் சிரசிலும் பெருவிரலோடுகூடிய சுட்டுவிர லால் தற்புருட மந்திர முச்சரித்து முகத்திலும் பெரு விரலோடுகூடிய நடுவிரலால் அகோரமந்திர முச்சரித்து மார்பிலும் பெருவிரலோடுகூடிய அணிவிரலால் வாம தேவமந்திர முச்சரித்துக் குய்யத்திலும் பெருவிரலோடு கூடிய சிறு விரலால் சத்தியோசாத மந்திர முச்சரித் துப் பாதத்திலும் நியாசஞ் செய்தல் பஞ்சப்பிரமங்க ளாகிய அம்மந்திரங்களினுலே சிவனுக்குரிய சிரசு முகம் இருதயம் குய்யம் பாதம் என்னும் அவயவங்கள் உண் டானதாகப் பாவித்து அவற்றைப் பூசித்தலும், பெரு விரல் அணிவிரல்களினுலே வித்தியாதேக மந்திர முச் சரித்து இருதயத்தில் நியாசஞ் செய்தல் ...

லிங்கமூர்த்தியில் வித்தியாதேகம் வந்து பொருந்தினதாகப் பாவித்துப் பூசித்தலும், வலக்கையின் சுட்டுவிரல் நடுவிரல் அணிவிரல் மூன்றினாலும் நேத்திரமந்திர முச்சரித்து நேத்திரங்களில் நியாயஞ் செய்தல் சிவனுக்குரிய நேத்திரங்களை அவ்விடங்களில் வைத்துப் பூசித்தலும், சிவமூல மந்திரத்தினால் இருதயத்தில் நியாசஞ் செய்தல் அங்குள்ள சிவலிங்க மூர்த்தியிலே நிஷ்களமாகிய சிவனை ஆவாகனஞ் செய்து பூசித்தலும், அதன் பின்பு பெருவிரலோடு கூடிய சிறுவிரலினால் இருதய மந்திர முச்சரித்து இருதயத்திலும் பெருவிரலோடு கூடிய அணிவிரலினால் சிரமந்திர முச்சரித்துச் சிரசிலும் பெருவிரலோடுகூடிய நடுவிரலினால் சிகாமந்திர முச்சரித்துச் சிகையிலும் நியாசஞ் செய்தல் அம்மந்திரங்களினாலே சிவனுக்குரிய இருதயம் சிரசு சிகை என்னும் அங்கங்கள் அவ்விடங்களி லுண்டானதாகப் பாவித்துப் பூசித்தலும், சுட்டுவிரல்களினாலே கவசமந்திர முச்சரித்துக் கழுத்தை மூலநடுவளவாகச் சுற்றுதல் அம்மந்திரவடிவான கவசமுண்டானதாகப் பாவித்துப் பூசித்தலும், இடக்கை யணிவிரலால் வல வுள்ளங்கையிலும் வலக்கை யணிவிரலால் இடவுள்ளங்கையிலும் அஸ்திர மந்திர முச்சரித்து நியாசஞ் செய்தல் சிவனுடைய அஸ்திரத்தை அதில் அமைத்துப் பூசித்தலுமாகிய பாவனைகளை யுடையனவாம்.

பின்பு தாளத்திரயமும் திக்குப்பந்தனமும் அவகுண்டனமுஞ் செய்தல் முறையே அசுரரைத் துரத்தலும் திக்குகளில் அக்கினிப் பிரகாச முண்டாகிக் காவல் செய்தலும் மதிலுண்டாக்கலுமாகிய பாவனைகளையுடையனவாம். இவை அச்சிவசொரூபத்தைப் பாதுகாத்தற் பொருட்டுச் செய்யப்படுவன.

அதன்பின்பு சிவமூலமந்திர முச்சரித்துச் சிரசு ...ங்கிப் பாதமளவாக மகாமுத்திரை காட்டுதல் அங் ...யசிக்கப்பட்ட எல்லா மந்திரங்களையும் ஏகீபா ...ாம். ஏகீபாவம் - ஒருமைப்படுத்தல்.

இங்ஙனம் மந்திர சகிதமாகச் செய்யும் கிரியாபாவனைகளினது வலிமையினலே தன்னிடத்துச் சிவசொரூபமானது உண்டாகுமென் றுணர்க. கரநியாசமும் இவ்வங்க நியாசமும் சேர்ந்ததே சகளீகரணமாம்.

இது மேலே சந்தியா சத்தியைத் தியானிக்க வேண்டியிருத்தலின் அதற்குரிமையுடைய சிவசொரூபீயாய்த் தன்னை யாக்கிக்கொள்ளுதல் காரணமாகச் செய்வதெனக் கொள்ளுதலுமாம்.

சிவசொரூபத்தை யடைந்தாலன்றிச் சிவத்தியானஞ் செய்யுமுரிமை யுண்டாகமாட்டாதென்க.

இனி இருதயத்தில் விளங்கும் சிவாசனமாவது பீடத்தின் அடியிலே கூர்மாசனத்தின்மேல் ஆதாரசத்தியும் அதன்மேல் அனந்தாசனமும் அதன்மேல் அனந்தனும் அதன்மேல் தர்மம் ஞானம் வைராக்கியம் ஐசுவரியம் அதர்மம் அஞ்ஞானம் அவைராக்கியம் அனைசுவரியம் என்னும் இவற்றுலாய சிங்கரூபமான எட்டுக்கால்களும் பீடத்தின்மேல் மேகலையின் அடியில் அசுத்த மாயைவரையும் வியாபகமான அதச்சதனமும் அதன் மேற் சுத்தவித்தையின்கீழ் ஊர்த்துவச் சதனமும் அதன் நடுவிலே மாணிக்க வர்ணமான கிழங்கும் பவளம்போன்ற அங்குரமும் நீலவர்ணமான நாளமும் வெள்ளி போன்ற இலையும் வித்தியேசுரரெண்மர் வடிவமாய்ப் பொன்போன்று விளங்கும் எட்டு இதழ்களும் அறுபத்துநான்கு கலாவடிவமாய் விளங்கும் கேசரங்களும் ஐம்பத்தோரக்கர் வடிவான ஐம்பத்தொரு பீசங்களுள்ள பொன்போன்ற கர்ணிகையும் உள்ளதாய், இதழ்களெட்டிலும் வாமாதி சத்திகளெண்மரையும் கர்ணிகையில் மனோன்மனியையும் உடையதாய், தளாக்கிர விருத்தத்தில் சூரியமண்டலமும் அதன் அதிபாகிய பிரமாவும் கேசராக்கிர விருத்தத்தில் சந்திரமண்டலமும் அதனதிபாகிய விஷ்ணுவும் கர்ணிகாக்கிர[illegible] அக்கினி மண்டலமும் அதனதிபாகிய உருத்[illegible] கர்ணிகையின் நடுவில் சத்திமண்டலமும்

கிய ஈசானும் விளங்கப்பெறுவதாய் இங்ஙனம் ஆதார சத்திமுதற் குடிலாசத்தி பரியந்தம் பாவிக்கப்படும் மந்திரசிம்மாசனமாம்.

சிவனுக்குரிய மூர்த்தியாவது சிவதத்துவ சொரூபமாய்த் தேசோமயமாய்த் தண்டாகாரமாய்ப் பரவிந்து வியாபகமாயுள்ள வடிவமாம்.

சிவமூர்த்திக்குப் பஞ்சப்பிரம மந்திரங்கள் சிரசு முதலிய அவயவங்களாயிருக்கும்.

வித்தியாதேகம் சிவதத்துவவரை வியாபகமானதாயும் மின்னலையொத்த பிரகாசமுடையதாயும் விளங்கும்.

நேத்திரம் சர்வஞ்ஞதைக்கு ஏதுவாய் ஐந்துமுகங்களிலும் இருக்கும்.

சிவம் சர்வகர்த்தத்துவ முடையதாயும் நிஷ்களமாயும் விபுவாயும் ஞானனந்தமய சொரூப முடையதாயும் பிரகாசிக்கும்.

பிராணயாமம்

மூக்கின் வலப்புறத்துள்ள பிங்கலைநாடியினல் அகத்திலுள்ள அசுத்தவாயுவைப் புறத்திற் கழித்தலாகிய இரேசகமும், இடப்புறத்துள்ள இடைகலை நாடியினற் புறத்தேயுள்ள சுத்தவாயுவை வாங்கி உள்ளே நிரப்புதலாகிய பூரகமும் செய்து, பூரித்தவாயுவைச் சுழுமுனை நாடியிற் செலுத்திக் கும்பகஞ் செய்தல் பிராணயாமமெனப்படும். பிராண ஆயாமம் - பிராணனைத் தடுத்தல். இயன்றளவு கும்பகஞ் செய்தபின்பு பிங்கலை நாடியினல் இரேசகஞ் செய்தல்வேண்டும்.

இரேசகமுதலியன மாத்திரை என்னுங் கால ...கொண்டு செய்யப்படுவனவாம். இரேசகத்துக்கு ...ரை பன்னிரண்டு. பூரகத்துக்கு மாத்திரை ஆறு. ...கு மாத்திரை அதமம் மத்திமம் உத்தமம்

என முத்திறப்படும். இருபத்து நான்குமாத்திரை அதமம். அதனிருமடங்கு மத்திமம். மும்மடங்கு உத்தமம்.

கும்பகமானது அகர்ப்பமெனவும் சகர்ப்பமெனவும் இருவிதப்படும். மந்திரமுந் தியானமுமின்றிச் செய்வது அகர்ப்பம். மந்திரத்தோடுந் தியானத்தோடுஞ்செய்வது சகர்ப்பம்.

சிவதீக்ஷைபெறாத பிராமணர் முதலினோர் பிரணவத்தினாலும், ஆசாரியன் சாதகன் என்னுமிருவரும் பன்னிருகலாப்பிரசாதத்தோடு கூடிய மூலமந்திரத்தினாலும் புத்திரகன் சமயி என்னுமிருவரும் சங்கிதாமந்திரங்களினாலும் பிராணாயாமஞ் செய்தற்குரியர்.

பிராணயாமஞ் செய்யும்பொழுது விரிந்த மனமுடையனாயிருப்பிற் போகமும் ஒடுங்கிய மனமுடையனாயிருப்பின் முத்தியுஞ் சித்திக்கும்.

இது மேலே செய்யப்படுவதாகிய சந்தியாசத்தித்யானத்தில் மனம்விரிந்து புறஞ்செல்லாது ஒடுங்கியிருத்தற்பொருட்டுச் செய்யப்படுவதாம். பிராணவாயுவைக் கும்பித்து நிறுத்தவே மனமுங்குவிந்து ஒருநிலைப்படுமென்றுணர்க.

பிராசாதம் என்பது சிவஞானகதியாகிய முத்தியைக்கொடுப்பது எனப் பொருள்படும். பிரா-சிவஞானம், சா-கதி. த-கொடுப்பது.

பிராசாதமந்திரமானது ஐந்து கலைமுதற் பதினாறு கலைவரையுமுள்ள கலாபேதங்களாற் பலவிதமாயிருக்கும். அவற்றுள் ஒன்பது பன்னிரண்டு பதினாறு என்னுங் கலைகளையுடைய மூன்றுவித பிராசாதமும் சிறந்தனவாகும். அவற்றுள்ளும் பன்னிருகலைப் பிராசாதமே மிகச்சிறந்ததாகும்.

பிராசாதமந்திரத்தின் பன்னிருகலையாவது மு... கோஷகலையாகிய ஹகாரம், பின்பு மேதாக... ஔகாரம், பின்பு இரசகலையாகிய ஊகாரம்...

கலையாகிய மகாரம், அதன்பின்பு விந்துகலை, அர்த்த சந்திரகலை, நிரோதிகலை, நாதகலை, நாதாந்தகலை, சத்திகலை, வியாபினிகலை, சமனுகலை, உன்மனுகலை என்னுமிவையாம்.

இவற்றுள் சிவபீசமாகிய கோஷகலை மூலாதாரகமலமுதல் நாபிகமலபரியந்தம் வியாபித்திருக்கும். மேதாகலை இருதயகமல பரியந்தம் வியாபித்திருக்கும். இரசகலை கண்டத்தானபரியந்தம் வியாபித்திருக்கும். விஷகலை கண்டத்தினடியிற் றொடங்கி நாவடியளவும் வியாபித்திருக்கும். விந்துகலை புருவநடுவளவும் வியாபித்திருக்கும். புருவநடுமுதற் பிரமரந்திரமளவும் உள்ள பதினோரங்குல விடத்திலே தனித்தனி யிரண்டேமுக்காலங்குலவளவில் அர்த்தசந்திரகலை நிரோதிகலை நாதகலை நாதாந்தகலை என்னும் நான்கு கலைகளும் வியாபித்திருக்கும். சிவபீசமாகிய நாதமென்னும் கோஷகலையானது இக் கலைகளோடுகூடி வேறுபாடுடையதாகி மீண்டும் பிரமரந்திர சமீபத்திலே நாதமாகக் கேட்கப்பட்டதாகி ஆண்டோ நாதாந்தத்தன்மையை யடைந்து பிரமரந்திரத்திலொடுங்கும். அதன்மேல் ஓரங்குலவளவுடைய விடத்திலே சத்திகலை வியாபித்திருக்கும். அதன்மேல் மூன்றங்குலவிடத்திலே வியாபினிகலை வியாபித்திருக்கும். அதன்மேல் நாலங்குலவிடத்திலே சமனுகலை வியாபித்திருக்கும். மனத்தோடு கூடியதாதலின் இது சமனேயெனப்பட்டது. மனத்தொழினிகழ்ச்சி யுளதாகிய வித்துணையும் பாசக்கூட்டமுளதாமென்றும் அதன்மேற் பாசநீங்கப் பரபதப் பெறுதியுளதாமென்று முணர்க: இனிப் பிரம ரந்திரத்திலிருந்து எட்டங்குலவளவுள்ள விடத்தின் மேலுள்ள நாலங்குலவிடத்திலே உன்மனுகலை வியாபித்திருக்கும். மனநீங்கப்பெற்றமையால் இது உன்மனேயெனப் பெயர் பெற்றது. இங்கு விளங்குவதாகிய சத்தியே பராசத்தியாம். இச்சாசத்திவடிவமாகிய ...ங்கவே எல்லாத் தத்துவங்களு மடங்குமாதலின் ...த்தி எல்லாத் தத்துவங்களையுங் கடந்து நிற்கு... இனி உன்மனுந்தத்திலே பிராசாத மந்

திர வாச்சியராகிய பரமசிவன் இக்கலைகளோடு கூடி விளங்குவர். அத்தானமே துவாத சாந்தமெனப்படுவது.

பிராசாதத்தாற் பிராணாயாமஞ் செய்யும்பொழுது இக்கலைகளின் மாத்திரை பிரபை காரணேசுரர் தத்துவ முதலியவற்றையு முணர்ந்து செய்தல் வேண்டும். அவற்றின் விவரத்தை ஈண்டு விரிப்பிற் பெருகுமாதலின் விரிந்த நூல்கள் வாயிலாக வுணர்ந்துகொள்க.

இனி ஒடுக்கமுறைபற்றிக் கலைகளை ஒடுக்கிச் செல்லும்போது சமனகலை யொடுங்கவே மனத்தின் வியாபாரமடங்கும். அஃதடங்கவே பாசநீக்கமுளதாம். இங்ஙனம் நிலமுதற் சிவமீறாகிய முப்பத்தாறு தத்துவங்களையும் விட்டு நீங்கியவிடத்து இச்சை ஞானம் கிரியை என்னும் சத்திகளுதிக்கும். சாதகன் அச்சத்திகளைத் தியானித்து அவற்றின் வடிவிலே அந்தர்ப்பவித்த பாவனையாகச் சிந்திக்கக்கடவன். சிவதர்மிணி தீக்ஷிதனும் ஆசாரியனும் அச்சத்திகளோடு பராசத்தியை யடைந்து இச்சாஞானக்கிரியைகளையும் விட்டுப் பராசத்தியினது வடிவிலே அந்தர்ப்பவிக்கக் கடவன். அத்தியான முறை மேலே சந்தியாத்தியானத்தில் வருதல் காண்க.

இனிப் பிராணாயாம முடிவிலே மூலமந்திர முச்சரித்து வலக்கையைச் செவியில் வைத்தல் இரேசக முதலியன செய்தவிடத்து உண்டாகிய வாயுவின் அசுத்தமானது அங்குள்ள அக்கினியினால் ஒழிந்து கை சுத்தியாதற் பொருட்டாம்.

சிவதீர்த்தகரணம்

இருதயமந்திர முச்சரித்துப் புருவமடுவாகிய விந்துத்தானத்துள்ள அமிர்தத்தை அங்குச முத்திரையினால் எடுத்துச் சலத்தில் வைத்து மூலமந்திரத்தினால் திரித்து அந்தச் சலத்தைச் சிவதீர்த்தமாகப் ப அதற்குத் திக்குப்பந்தனமும் அவகுண்டன

தேனுமுத்திரை கொடுத்தல் சிவதீர்த்த கரணமாம். இது சந்தியாத்தியானத்தின் பின்னர்ச் செய்யப்படுவனவாகிய மந்திராபிஷேகம் மார்ச்சனம் அகமர்ஷணம் தருப்பணம் முதலிய கிரியைகளுக்கு உதவுமாறு அந்நீரை அமிர்தமய மாக்கி அதிலே சிவவடிவைப் பதித்து இங்ஙனம் அதனைச் சிவதீர்த்தமாக்குதலாம். சிவதீர்த்தகரணம்-சிவதீர்த்தஞ் செய்தல்.

சந்தியாத்தியானம்

பிராதக்கால முதலிய நான்குகாலங்களிலும் அவ்வக்காலங்களுக்குரிய சந்தியை யெனப்படுஞ் சிவசத்தியை இருதயமுதலிய தானங்களிலே தியானஞ் செய்தல் சந்தியாத்தியானமாம். சந்தியா என்பது செவ்வே தியானிக்கப்படுவது எனப் பொருள்படும். சம்-செவ்வே தியா-தியானித்தல்.

அக்கினியோடு உஷ்ணம்போலச் சிவத்தோடு அபின்னையாய்ச் சகலகரும சாக்ஷிணியாயிருக்குஞ் சிவசத்தியே சந்தியையெனப் பெயர்பெறும். அச்சிவசத்தி அபரை பராபரை பரை என முத்திறப்படும். அபரை பிராமி வைஷ்ணவி ரௌத்திரி என மூன்று விதப்படும். பிராமி நூறுகோடி யோசனை விசாலங்கொண்ட இரத்தமண்டலத்திலே சகல லோகங்களையுஞ் சிருட்டித்தல் காரணமாக விருப்பள். வைஷ்ணவி இரண்டுகோடியோசனை விசாலங்கொண்ட சுவேதமண்டலத்திலே சகல லோகங்களையும் இரக்ஷித்தல் காரணமாகவிருப்பள். ரௌத்திரி மூன்று கோடி யோசனை விசாலங்கொண்ட விந்துமண்டலத்திலே சகல லோகங்களையுஞ் சங்கரித்தல் காரணமாக விருப்பள். இனிப் பராபரை ஞானசத்தி கிரியா சத்தி இச்சத்தி என மூவிதப்படும். பரை இரத்தை [illegible]கிலே அசிதை கிருஷ்ணை என நான்குவிதப்படும்.

[illegible]யி பிராதக்காலத்திலே பிராமியை இருதயத்திற் [illegible] வேண்டும்.

புத்திரன் பிராதக்காலத்திலே பிராமியை இருதயத்திலும், சாயங்காலத்திலே ரௌத்திரியைப் பிரமந்திரத்திலும் தியானித்தல் வேண்டும்.

நிருவாணதீக்ஷை பெற்றுச் சாதகாபிஷேகமில்லாதிருக்கும் புத்திரன் பிராதக்காலத்திலே பிராமியை இருதயத்திலும், மத்தியான காலத்திலே வைஷ்ணவியை விந்துவிலும், சாயங்காலத்திலே ரௌத்திரியைப் பிரமரந்திரத்திலும் தியானித்தல் வேண்டும்.

சாதகாசாரியன் பிராதக்கால முதலிய மூன்றினும் பராபரையின் பேதமாகிய ஞானசத்தி கிரியாசத்தி இச்சாசத்திகளை முறையே இருதயம் விந்து பிரமரந்திரங்களிலே தியானித்தல் வேண்டும்.

சிவதர்மிணி தீக்ஷிதன் பிராதக்காலத்திலே பரையினபேதமாகிய இரத்தையை இருதயத்திலும், மத்தியான காலத்திலே சுக்கிலையை விந்துவிலும், சாயங்காலத்திலே அசிதையைப் பிரமரந்திரத்திலுந் தியானித்தல் வேண்டும்.

ஆசாரியன் பிராதக்காலமுதல் அர்த்தராத்திரி யீறுகிய நான்கு காலங்களிலும் பரையின் பேதமாகிய இரத்தை சுக்கிலை அசிதை கிருஷ்ணை என்னும் நால்வரையும் முறையே இருதயம் விந்து பிரமரந்திரம் துவாதசாந்தங்களிலே தியானித்தல் வேண்டும்.

இனி இச்சந்தியா சத்திகளுள்ளே பிராமியை அன்னவாகனத்தின் மேலே பதுமாசனம் பொருந்த இருப்பவளாய்ச், செந்நிறத்தளாய், நான்கு முகமும் சடையும் எட்டுக்கண்ணும் நான்கு கையும் வலக்கையிரண்டிலும் சிருக்கும் அக்ஷமாலையும் இடக்கையிரண்டிலும் தண்டுங் கமண்டலமு முடையவளாய்ப், பூணூலுஞ் சிவந்த ஆபரணமும் சிவந்த புடைவையுந் தரித்தவளாய்ப் இளம்பருவமும் சத்துவ குணமு முடையவளாய்த் தியானித்தல் வேண்டும்.

வைஷ்ணவியைக் கருடவாகனத்தின்மே[illegible] மாசனம் பொருந்த இருப்பவளாய், [illegible]

ளாய், ஒரு முகமும் நான்கு கையும் வலக்கையிரண்டிலும் கதையும் அபயமும் இடக்கையிரண்டிலும் சங்கும் சக்கரமு முடையவளாய்ப், பூணூலும் வநமாலேயும் வெள்ளைப் புடைவையுந் தரித்தவளாய், யௌவனபருவமும் இராசதகுணமு முடையவளாய்த் தியானித்தல் வேண்டும்.

ரௌத்திரியை இடபவாகனத்தின் மேலே பதுமாசனம் பொருந்த இருப்பவளாய், நீல நிறத்தினளாய், ஒரு முகமும் இளம்பிறை தாங்கிய சடையும் மூன்று கண்ணும் நான்கு கையும் வலக்கையிரண்டிலும் சூலமும் அக்ஷமாலேயும் இடக்கையிரண்டிலும் அபயமும் வேலும் உடையவளாய்ச், சற்றே யௌவனந் திரும்பிய பருவமும் தாமசகுணமு முடையவளாய்த் தியானித்தல் வேண்டும். இவை மூன்றும் சகுணத்தியானம்.

இனி ஞானசத்தி கிரியாசத்தி இச்சாசத்திகளே முறையே சூரியப் பிரகாசமும் சந்திரப்பிரகாசமும் அமிர்த சமுத்திரம்போற் பிரகாசிக்கும் நாதசொரூபமுமாகத் தியானித்தல் வேண்டும். இவை நிர்க்குணத்தியாயம்.

பரையின் பேதநான்கனுள் இரத்தையை உதய காலத்து விளங்கும் அநேக பாலசூரியப் பிரகாசம்போலவும், சுக்கிலேயை அநேக பூரணசந்திரப் பிரகாசம்போலவும், அகிதையை அமிர்த சமுத்திரம்போற் பிரகாசிக்கும் நாதசொரூபமாகவும், கிருஷ்ணையைச் சரற்காலத்து விளங்கும் நிர்மல சலம்போற் பிரகாசிப்பதாகவும் அத்தியந்த நிஷ்களமானதாகவும் அறிவையே காரணமாகக் கொண்டு தியானித்தல்வேண்டும். இவை ஞானவழிபாடு.

இங்ஙனம் அவ்வவர் அதிகாரத்துக்கியைய அவ்வக் காலங்களுக்கேற்ற சந்தியை யெனப்படும் சிவசத்திகளைத் தியானித்தபின்னர் அச்சத்திகளினுடைய வர்ண ...ி மண்டலத்தினுள்ளே தமது ஆன்மாவும் சரீர ...பொருந்தி அந்தர்ப்பவித்தனவாகச் சிந்தித்தல்

இது கன்மம் தவம் செபம் தியானம் ஞானம் என்னும் சிவதருமமைந்தனுள் நான்காவதாய் ஞானசமாதிகைவருவதற்கு ஏதுவாவதாய்ச் சமயிமுதல் ஆசாரியரீருயுள்ளோர் தத்தம் பரிபக்குவத்துக்கேற்பப் பெறும் அபர பர முத்திநிலைகளை யுதவ வல்லதாய் விளங்குவதாகிய தியானமாம். இத்தியானத்தை நாடோறும் நியமமாகச்செய்துவரின் ஞானசமாதியும் முத்தியும் எளிதிலே சித்திக்குமென்றுணர்க.

சிவனது அருட்சத்தி வியாபகத்துள் அத்துவிதமாகக் கலத்தலே சைவசித்தாந்த முத்தியாகலின், இது அச்சத்திபேதங்களைத் தியானித்து அதன் ஒளிப் பிழம்பினுள் அத்தர்ப்பவிக்கும் நிலையாக அமைந்துள்ளதென்க.

மந்திராபிஷேகம்

கையிலே சலத்தை வைத்துக் கும்பகமுத்திரையாகப் பிடித்துக் கொண்டு ஈசாசனமுதலிய பதினொருமந்திரங்களால் அபிமந்திரித்து மூலமந்திரத்தினால் சிரசிலே தெளிதல் மந்திராபிஷேகமாம். இதுதான்பெற்ற அருட்பேற்றுநிலை உறுதிப்படுமாறு சிவதீர்த்த வடிவினதாகிய அமுதகும்பத்தினால் அபிஷேகஞ் செய்து கொள்ளுதலாம்.

மார்ச்சனம்

சலத்தை வலக்கையால் மூடி நமோந்த ஈசானுதி பதினொருமந்திரங்களால் அபிமந்திரித்து வலக்கையால் எடுத்து இடக்கையில் விட்டு வைத்துக்கொண்டு அவ்விடக்கையினின்றும் கீழே யொழுகுகின்ற சலத்தை வலக்கையினாலே வௌஷடந்த ஈசானுதி பதினொ[illegible]திரங்களால் சிரசிலே தெளித்தல் மார்ச்சனமா[illegible] சன்ம-சுத்திசெய்தல்.

இது இத்தூலசரீர சம்பந்தமாய்வந்த தீவினைகளை ஒழித்தல் காரணமாகச் செய்வது. தூல சரீரமாவது பஞ்சபூத பரிணாமமாய்வந்த இவ்வுருவுடம்பு.

அகமர்ஷணம்

முன் இடக்கையில் வைத்திருந்த சலத்தில் எஞ்சிய பாகத்தை வலக்கையிலே விட்டு மூக்குக்குச் சமீபத்திலே பிடித்துக் கொண்டு, அது வெண்மைநிறமுள்ள சுத்தமான தர்மரூபமாய் இடமூக்குவழியா யுட்புகுந்து அகத்துள்ள பாவத்தை யழித்ததாகவும், அந்தப்பாவம் மைக்குழம்புபோல வலமூக்கினாலே புறத்தே நீங்கிக் கையில் வந்ததாகவும் பாவித்து, வலக்காற் பெருவிரலிற் சுவாலிக்கும் அக்கினி வர்ணமான வச்சிரசிலையிலே உம்படந்த அஸ்திரமந்திர முச்சரித்துப் புருவநெரிப்புடனே விட்டு, அந்தப்பாவம் அதில்விழுந்து பொடிபட்டொழிந்ததாகப் பாவித்தல் அகமர்ஷணமாம். அகமர்ஷணம் - அகத்துள்ளபாவத்தை அழித்தல்.

இது சூக்கும சரீரபந்தமாய்வந்த தீவினைகளை ஒழித்தல் காரணமாகச் செய்வது.

சுத்ததர்மமாவது சிவபுண்ணியம் சிவனை உபாசித்ததனால் வரும் சிவபுண்ணியமானது பஞ்சுப்பொதியை எரிக்கப்புகுந்த அக்கினிபோல இவனது பாவங்களை அழித்தொழிக்குமென் றுணர்க.

ஆசமனசகளீகரணம்

அதன்பின்பு ஆசமனஞ்செய்தல் சூக்குமசரீரத்துக் ...தத்துவங்கள் சுத்தியாதற் பொருட்டும், சகளீ கர...செய்தல் அச்சரீரம் சிவசொருபமாக்கப்படும் ...ம். அன்றி மேற்செய்யப்படும் தருப்பண

கன்மததுக்கு அங்கமாய்ச் செய்யப்படுவதாகக் கொள்ளு தலுமாம்.

சூக்குமசரீரமாவது சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் என்னும் பஞ்ச தன்மாத்திரைகளினலும் மனம் புத்தி அகங்காரம் என்னும் அந்தக்கரண மூன்றினலும் ஆக்கப்பட்ட புரியட்டகவடம்பு. இது சிருட்டி கால முதற் சங்காரகாலம் வரும்வரையில் அல்லது இடையே முத்தியையடையின் அதுவரையில் அழியாமலிருப்ப தாய், இப்பொழுது எடுத்திருக்கும் இத்தூலசரீரத்துக் கும் இதுபோன்று வினைக்கீடாக அவ்வப்பொழுது எடுக்கும் பல தூலசரீரங்களுக்கும் முதற்காரணமாயிருப் பதாயுள்ளது.

கவசவேஷ்டனம்

கவசமந்திர முச்சரித்து வலக்கையில் அமிர்தமய மான சலங்கொண்டு தன்னை வலமாகச்சுற்றுதல் கவச வேஷ்டனமாம். வேஷ்டனம்-சுற்றுதல். இது தன்னைச் சூழக் கவச மந்திரமயமான மதிலுண்டாக்குதலாம்.

சதாசிவத்தியானமும் காயத்திரிசெபமும்

பின்பு சூரியமண்டலத்து நடுவில் விளங்கும் சதா சிவமூர்த்தியைத் தியானஞ் செய்து, சிவகாயத்திரியைப் பொன்னிறத்தளாய், ஒரு முகமும் மூன்றுகண்ணும் நான்குகையும் அக்கைகளில் வரமும் அபயமும் செபமா லையும் கமண்டலமுமுடையவளாய்த் தியானித்து, கா யத்திரி மந்திரமுச்சரித்து மும்முறை அர்க்கியங்கொடு த்து, பத்துருவாதல் எழுருவாதல் காயத்திரிமந்திர த்தைச் செபித்தல்வேண்டும்.

தருப்பணம்

சிவமூலமந்திரத்தினலே மும்முறை தருப்பணஞ் செய்து பத்துருச் செபித்து, பிரதக்ஷிணஞ்செய்து, சங்கிதாமந்திரம் பதினுென்றுனுலும் தருப்பணஞ்செய்து, பின்பு மந்திரங்களுக்கும் தேவர்களுக்கும் இருடிகளுக்கும் மனுடர்களுக்கும் பூதங்களுக்கும் பிதிர்களுக்கும் ஆசாரியருக்குங் அவ்வவர்க்குரிய மந்திரமுச்சரித்துத் தருப்பணஞ்செய்தல் வேண்டும். இது அவர்களை உவப்பித்தல் காரணமாகச் செய்வது. முற்கூறிய சிவதருமமைந்தனுள் இது கன்மமெனப்படும்.

தருப்பணதீர்த்தமானது தேவதீர்த்தம், ஆரிடதீர்த்தம், மானவதீர்த்தம், பூததீர்த்தம், பிதிர்தீர்த்தம் என ஐந்துவகைப்படும்.

தேவதீர்த்தமாவது கைவிரனுனிகளாற் கொடுப்பது. ஆரிடதீர்த்தமாவது விரல்களினிறைச் சந்தியாற் கொடுப்பது. மானவதீர்த்தமாவது கனிட்டிகை மூலத்தாற் கொடுப்பது. பூததீர்த்தமாவது மணிக்கட்டிற்கொடுப்பது. பிதிர்தீர்த்தமாவது தர்ச்சனி அங்குட்டங்களின் நடுவே கொடுப்பது:

தேவதீர்த்தத்தினலே தேவர்களுக்கும், ஆரிடதீர்த்தத்தினலே இருடிகளுக்கும், மானவ தீர்த்தத்தினலே மானுடர்களுக்கும், பூத தீர்த்தத்தினலே பஞ்சபூதங்களுக்கும், பிதிர்தீர்த்தத்தினலே பிதிர்களுக்கும் தருப்பணஞ் செய்தல் வேண்டும்.

தேவர்களாவார் சதாசிவன் மகேசுரன் உருத்திரன் விஷ்ணு பிரமா எனவிவர்.

இருடிகளாவார் அத்திரி விசுவாமித்திரர் புலத்தி ... புலகர் கிருது வசிஷ்டர் மரீசி எனவிவர்.

... டர்களாவார் சநகர் சநந்தனர் சநாதனர் சநற் ... பிருகு பஞ்சசிகர் சிவர் உருத்திரர் பவ

ரனி பிரமா விஷ்ணு அக்கினி வாயு இயமன் சூரியன சந்திரன் எனவிவர்.

பூதங்களாவன பிரிதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் எனவிவை.

ஆசமனசகளீகரணம்

அதன்பின்பு ஆசனமும் சகளீகரணமும் முன்போலச் செய்தல் வேண்டும். இது முன்செய்த தத்துவ சுத்தியும் சிவசொரூப பாவனையும் நிலைபெறற் பொருட்டுச் செய்யப்படுவது.

தீர்த்தோபசங்காரம்

முன் விந்துத்தானத்திலிருந் தெடுத்துச் சலத்தில் வைத்த அமிர்தத்தை இருதய மந்திர முச்சரித்துச் சங்கார ... ரையினுலே எடுத்து, விந்துத்தானத்தில் ஒடுக்குதல் ... தோபசங்காரமாம். உபசங்காரமாக்குதல்.

சூரியோபஸ்தானம்

... ிறையச் சலம்விட்டுப் பிடித்துக்கொண்டு சந் ... திரம் பதினென்று முச்சரித்து, மூலமந்தி ... ஆதித்தமண்டல மத்தியில் விளங்கும் சி ... தே கொடுத்து, சூரிய மந்திரததி ... ற தருப்பனஞ்செய்து, ஆதித்த மூர்த்தி ... உபஸ்தானஞ் செய்தல் சூரியோ ... னம் - அடுத்தல், சார்தல்.

சந்தியாசத்தியைத் தியா ...

... க ... ளட ...

தன மெனப்படும். ஆதலின் அவற்றின் இரகசியங்களை மாத்திரம் ஈண்டுரைத்தனம். சந்தியாவந்தனத்தின் பின்னர்ச் செய்யப்படும் செபம் தோத்திரம் என்பன இவற்றின் வேறாதலின் அவற்றின் இரகசியங்களை ஈண்டுரைத்திலம்.

Q2:47 N27

சந்தியாவந்தன ரகசியம்
முற்றுப் பெற்றது.

22 9 265